IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

OS.No. 653/2009

Deposition of witness for PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஜெயா | Caste | : | |
| Husband Name | : | கிருஷ்ணன் | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 9th day of June, 2025.

3,4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. நான் 2009ம் வருடம் வழக்கு தாக்கல் செய்தேன். 1ம் பிரதிவாதி தாவா சொத்தை வாங்கிய விவரம் எனக்கு தெரியும். எந்த வருடம் தாவா சொத்தை வாங்கினார் என்று தெரியும். வயது மூப்பின் காரணமாக ஞாபகமில்லை. தாவா சொத்தை இடிக்கும் போது தான் எனக்கு தெரிய வந்ததா என்றால் இல்லை, அவர் வாங்கும் போதே எனக்கு தெரியும்.

2. சொத்தை வாங்கிய தேதியிலிருந்து 1ம் பிரதிவாதிதான் சொத்தில் அனுபவத்தில் இருந்து வந்தார் என்றால் இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்யும் போதே தற்போது குறியீடு செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.13 முதல் வா.சா.ஆ.20 வரையிலான ஆவணங்களை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.13 குறித்து என்னுடைய மனுவில் நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் ஆமாம்.

3. தற்போது உள்ள வழக்கின் சொத்திற்கும் வா.சா.ஆ.13ல் குறிப்பிட்டுள்ள வழக்கின் சொத்திற்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சம்மந்தம் இருக்கிறது. வா.சா.ஆ.13 மற்றும் வா.சா.ஆ.14ல் வழக்கு சொத்தின் சர்வே எண் மற்றும் அளவீடு இல்லை என்று சொன்னால் சரிதான். அதனால் மேற்கண்ட ஆவணமானது இந்த

வழக்கிற்கு சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய பாட்டியின் சொத்தும் கொஞ்சம் இந்த வழக்கின் சொத்துடன் உள்ளது.

4. வா.சா.ஆ.20 வது ஆவணத்தில் வீட்டு எண் மற்றும் சர்வே எண் இல்லை என்று சொன்னால் எனக்கு தெரியவில்லை. வேறொரு இடத்திற்கு செலுத்திய வீட்டு வரி ரசீதை இந்த வழக்கில் எடுத்து வந்து வழக்கை திசை திருப்புகிறேன் என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் வா.சா.ஆ.18 மற்றும் வா.சா.ஆ.19 ஆவணங்களும் இந்த வழக்கிற்கு சம்மந்தமில்லாத ஆவணங்கள் என்று சொன்னால் சம்மந்தம் இருக்கிறது. அந்த வீட்டின் ரசீது தான் ஆகும்.

5. வழக்கு சொத்து விவரத்தில் ஜக்குபந்தியில் அளவுகள் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். அதேபோல் சொத்து விவரத்தில் யார்யாருக்கு எவ்வளவு பாகம் என்று நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்கு காலதோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. சொத்து விவரத்தில் நான் சரியான விவரத்தை கொடுக்காததால் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. வழக்கின் சொத்தில் பரிகாரம் கேட்பதற்கு எனக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை=இல்லை.

(Sd/-)..K.Inbarani
DISTRICT MUNSIF
KATPADI